Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ஞ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜயவருடம் தைமீ கஉ வெள்ளிக்கிழமை (14 JAN. 1955) [இல-சக]

## தமிழ்ப் பண்பாட்டைக் குறிக்கும் தைப் பொங்கல் விழா

———o———

### நன்றி பாராட்டும் தனி சிறந்த வாழ்க்கை முறை

தமிழனின் தனிப்பண்பாட்டை விளக்கும் ஒருவிழாவாகும் பொங்கல் திருநாள். புதிய தானியம் அறுவடையாகி வந்தவுடன் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து விழாக் கொண்டாடுதல் எல்லாநாட்டு மக்களும் செய்கின்ற ஒன்றுதான். ஆனால், பிற நாட்டார் விழாக்களில் விளைவு மிகுத்ததால் உண்டாகிய மகிழ்ச்சி வெளியாகிறதே தவிர, வேறு ஒரு பண்பாடும் வெளிப்படவில்லை. கையில் பொருள் கிடைத்தால் யார்தான் மகிழமாட்டார்கள். ஆனால் கிடைத்தபொருள் யாரால் கிடைத்தது என்று ஆராய்ந்து பார்த்தல் ஆயிரத்திலொருவன் மட்டுமே செய்யக்கூடியகாரியம்.

அங்ஙனம் ஆராய்கின்ற ஆயிரம்பேர்களில் ஒருவன் மட்டுமே அப் பொருள் தனக்குக் கிடைக்க உதவியவர் நம்மைப் போன்ற மனிதர்களாயின் நன்றி பாராட்டும் ஒருவன் தன் நன்றியை வாயால் தெரிவித்து விடுவான். ஆனால் உதவி செய்தவர் நம்மைப்போல் மனிதராக இல்லாமல் விலங்காக இருந்துவிட்டால் யார்தாம் நன்றி பாராட்டுவர். பண்டு தொட்டே விலங்கினங்களையும் தம்மைப்போன்ற உயிர்கள் என்று மதித்து அவற்றிடமும் நன்றிபாராட்டிய பெருமை தமிழினம் ஒன்றையே சாரும். அந் நன்றி பாராட்டலின் அறிகுறியாகவே தமிழன் பொங்கல் திருநாளைக்கொண்டாடிவழிபாடாற்றினன்.

பொங்கல் அன்று புதிய பானையில் புதிய அரிசியை இட்டுப் பொங்கல் வைக்கின்றனர். கோடீஸ்வரன் வீட்டிற்கூட அன்று பொங்கல் இடுவது மண்பாத்திரத்தில்தான் என்றால் தமிழன் தனக்கு ஆதாரமாகவும் வாழ்வாகவும் உள்ள மண்ணை எவ்வளவு மதித்துப் போற்றினன் என்று கூறவும் வேண்டுமா? மண்ணிலிருந்து தோன்றி மண்ணையே ஆதாரமாகக்கொண்டு வாழ்ந்து இறுதியிலும மண்ணிடம்தான்போகவேண்டும்' என்றநினைவை மறவாமல் இருக்கப்போலும் விழாக் கொண்டாடுகிற பொங்கலன்றுகூட மண்பாண்டத்தில் பொங்கல் வைக்கிறான். உலகம் வாழவும் பயிர்கள் தழைக்கவும தோன்றுந்துணையாக நிற்பவன் சூரியன் என்பதை இற்றைநாள் விஞ்ஞானம் உணர்த்தும் முன்னரே தமிழன் அறிந்திருந்தானாதலின் பொங்கல் பானையை திறந்த வெளியில் முற்றத்தில் கதிரவன் எதிரிலேயே வைத்துச்சோறாக்கினன். தன்னுதவியால் விளைந்த நெல் பொங்கலாவதைக்கண்டு மகிழச் சூரியனைவிட யாருக்கு முதல் உரிமை? எனவே முதல் நாள் பொங்கல் கதிரவனுக்கு நன்றிபாராட்டுமுகமாக அமைந்துள்ளது.

P. J. G. சோதி — மல்லாகம்

அவன் கொடுத்த மழையாலும் அவன் தந்த சூட்டாலும் முற்றி விளைந்தநெல், கரும்பு, வாழை, முதலியவற்றை முதல முதலாக அவனுக்கே வழங்கி இதற்குச் "சூரியன் பொங்கல்" என்று பெயரும்இட்டான் தமிழன்.

கதிரவன் செய்த கண்ணுக்குத் தெரியாத உதவிக்கடுத்துக் கண்காணும் முறையில் உதவி செய்தது மாடு அல்லவா? வயலை உழுவது தொடங்கிப் பல வகையில் மனிதனுக்கு உதவியது அன்றோ? பால் தந்து அவனை வளர்ப்பதுடன், எருவைத் தந்து அவன் வயலைக் காத்த பெருமை மாட்டுக்கே உண்டு. தாங்கள் பெருமுயற்சி செய்து பெறும் பயனைத் தாம் அனுபவியாமல் பிறருக்குப் பங்கிட்டுத் தரும் பெரியோர்களைப் போல் உழவுமுதல் அனைத்திலும் உதவிய மாட்டையும் தமிழன் மறவாமல் பொங்கலின் மறுநாள் "மாட்டுப் பொங்கல் வைக்கிறான். வழிபாடாற்றுகிறான். மாட்டையும் மறவாமல் பொங்கல் இட்ட தமிழன் நன்றி மறவாமைக்கு ஓர் எடுத்துக்காட்டன்றோ.

மாட்டை மறவாத தமிழன் கன்றையும் மறவாமல் மூன்றாம்நாள் கன்றுப் பொங்கல் இடுகிறான். இளங்கன்றாகப் பிறந்ததில் இருந்தே மாட்டின் தலையெழுத்து மனிதனுக்கு உழைப்பதுதான் போலும். எனவே, அக்கன்றின் உழைப்பைக் கண்டு நன்றியைப் பாராட்டப் போலும் கன்றுப் பொங்கல் என்னும் ஒருநாள் வைத்துள்ளான்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### சர்வகலாசாலைத் தலைவர் வயது

சர்வகலாசாலைத் தலைவர் பதவிக்கு நியமனம் பெறுபவர் அறுபது வயதுக்கு மேற்பட்டவராயிருக்கக் கூடாதென்று சர்வகலாசாலை மன்ற அங்கத்தவரொருவர் எடுத்துக் காட்டியிருக்கின்றாராம். இப்பதவியைக் குறிக்கும் சட்டம் இப்பொழுது பதவியிலிருப்பவர் அறுபதாம் வயதை அடைந்தால் சர்வகலாசாலை மன்றம் எதிருரை கூறாதவிடத்தில் அவருடைய காலத்தை நீடிக்கலாமென்பதேயாகும்; அஃதன்றி அறுபது வயதானவர் புதிய நியமனம் பெறலாமென்பதல்ல என்பது அவர் எடுத்துக்காட்டும் நியாயமாகும். இக்காரியத்தில் எண்ண வேறுபாடு காணவருகின்றது.

### இந்திய அரசாங்கத் தூதுவர்

இலங்கையில் இந்திய அரசாங்கத் தூதுவராக ஸ்ரீ பி. என். சக்கரவர்த்தி நியமிக்கப்பெற்றிருக்கிறாராம். இவர் இந்திய அரசாங்க இடைக்காலத் தூதுவராக இங்கிலாந்தில் கடமையாற்றியவர்.

### யாழ்ப்பாணம் சாராய வாக்கெடுப்பு

யாழ்ப்பாணம், கரையூர் சாராயக் கடைகள் மூடுதற்கு சென்ற சனிக்கிழமை நடந்த வாக்கெடுப்பில் மிகச்சிறிய தொகையினரே வாக்களிக்கச் சென்றமையால் கடைகள் மூட்டப்படமாட்டா. இந்த வாக்கெடுப்பில் மதுவிலக்கு மகாசபையார் ஈடுபடவில்லையென்று அறிய வருகின்றது.

## இன்றே சமயத் தொண்டில் ஈடுபடுவோமாக!

———:o:———

### ஆசிரியர்கள் தங்கள் கடன் ஆற்றினால் தொண்டர் தொகை பெருகாதா?

———:o:———

ஆலைகளிலும் முடுக்குகளிலும் இன்னாளில் கற்றவர்களும் கவிவாணர்களும் 'பிரசாரகர்களும் அரசியல் வாதிகளும் சமூக சீர்திருத்த வாதிகளும் முற்போக்காளரும் புரட்சிவீரரும் பகுத்தறிவாளரும், அன்னபிறரும் நாளுக்குநாள் பல்கிப் பலராகப் பலராக நம் சைவ சமயக் கொள்கைகளையும், கட்டுப்பாடுகளையும் ஆசாரம் அநுட்டானம் முதலியவற்றையும் அர்ச்சகர், பூசகர் முதலியோரையும் இழித்துரைப்போரும பழித்துத் தூற்றுவோரும் பலராகப் பலராகப் பெருகுவதை நாம் கண்டு வருகிறோம். ஆதலின் நாஸ்திகம் பரவாமற் பார்த்தற்கும் சைவம் தழைத்தோங்கச் செய்தற்கும் தியாகபுத்தியுடன் தொண்டாற்றுவதற்குத் தொண்டர்கள் திரளுகவென ஒரு வேண்டுகோள் தங்கள் பத்திரிகை வாயிலாக விடுத்திருந்தனர் ஓர் உண்மைத் தமிழ்ச் சமயாபிமானி. இவ்வேண்டுகோளோ மனமுவந்து யாவரும் வரவேற்கும் வாய்ப்புடையதே. ஆனால் ஒன்று நாம் மனத்திற் கொள்ள வேண்டும். உற்சாகத்துடன் உழைப்பதற்கு முன் வரும் அன்பர்கள் பயிற்சி பெறல் வேண்டும். அதனால் காலம் தாழ்த்தும். இப்பயிற்சி ஒருபுறம் நடக்கவும் இன்றே நாம் குறித்த தொண்டில் ஈடுபடுதற்குச் சாத்தியமான வழி உண்டாயின் அதனையும் மேற்கொள்ளலா மல்லவா!

ஆசிரியர்
பொ. ஆறுமுகசிவம்
மட்டக்களப்பு

இதுவரையும் நடைபெற்றுவந்த சைவப்பாடசாலைகளால் சைவசமய வளர்ச்சி எவ்வாறு ஏற்றமடைந்திருக்கிறது! ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்து வருடாவருடம் சமயதீக்ஷை பெற்றுள்ள மாணவர் தொகை நம்மை மகிழச் செய்யுமா? குறித்த பாடசாலை ஆசிரியர்களில் எத்தனைபேர் சைவானுஷ்டானர்களாய் ஆலய சேவை, குரு வழிபாடு முதலியன நடத்தி வருகிறார்கள்? இவற்றை நன்கு விசாரித்தறிவோமானால் நம்மை நாமே இகழ்ந்து கொள்வோம். இராமகிருஷ்ண மடத்தாரின் பராபரிப்பில் நடைபெறும் பாடசாலைகள் ஒன்றிரண்டிலுள்ள ஆசிரியர் சிலர் பாடசாலைப் பிள்ளைகளைக் கோயிலுக்குப்போகப்படாது என்றே வற்புறுத்தி வருகிறார்களாமென்ற வதந்தியுமுண்டு. இப் பாடசாலைகளில் கடமை பார்க்கும் ஆசிரியர்கள் அயற் கிராமங்களுக்குச் சென்று சமயப் பிரசாரங்கள் செய்வதற்கு முன்வராதிருந்தாலும் தங்கள் மாணவர்களுக்கு முன்மாதிரி கற்பிப்பதற்காகவாவது ஆலயவழிபாட்டில் ஈடுபடலாமல்லவா? ஆலயங்களுக்குச் சென்று பார்த்தால் உண்மை கண்டு தெளியலாம். ஆடவரும் மகளிரும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள், சைவசமய அறிவை வளர்ப்பதற்கும்சைவாசார

[தொடர்ச்சி 6ம் பக்கம்]

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். ஜய ஹூ தை மீ
க உ வெள்ளிக்கிழமை

## பொல்லாங்கு விளைக்கும் புத்தகங்கள் ... ...!

மக்கள் ஆட்சிமுறை நில வுகின்ற நாட்டில் யாதொன்றும் தடைசெய்யப்படக் கூடாது. எவரும் எதையும் சொல்வதற்கோ செய்வதற்கோ உரிமையுண்டு என்று இந்த விதமாகப் பொறுப்பு வாய்ந்தவர்களும் கருத்துக்களை அடிக்கடி எடுத்துரைக்கின்றார்கள். அன்னோர் எண்ணங்களை ஆராய்ந்து பார்த்தால் மக்கள் ஆட்சியின் குறிக்கோள் ஒவ்வொரு மனிதனும் வரையறை செய்யப்படாத தனி ஆட்சி நடத்தும் உரிமை என்று அவர்கள் முடிவு செய்திருப்பதாகத் தோன்றுகிறது.

பொதுவுடைமை நாடுகளிலிருந்து இலங்கையிலே இறக்குமதி செய்யப்படும் புத்தகங்கள் புரட்சிக்கொள்கையின் இலக்கணத்தை எடுத்துரைப்பதோடு நில்லாது ஈழத்து மக்கள் அனைவரும் ஒருவித ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குமமையாது குழப்பத்தையுண்டு பண்ணும் வழிவகைகளையும் உள்ளத்திலே ஊன்றச் செய்யும் வகையில் நெறியில்லாத உணர்ச்சியை ஊட்டுகின்றனவென்று அறிஞர்களும் மதபோதகர்களும் பலமுறையும் கண்டனஞ் செய்திருக்கின்றார்கள். இவ்விதமாக இந்நாட்டு அமைச்சவையும் கருதிப் புறநாட்டில் இருந்து இங்கு வருவிக்கப் பெறும் நூல்களிலே உள்நாட்டுக் குழப்பங்களை உண்டு பண்ணக் கூடியனவற்றைச் சுங்கப் பகுதியார் தடுத்து வைப்பதற்கான சட்டத்திலே நடைமுறையைப் பலப்படுத்தக் கூடிய திருத்தங்களைப் பாராளுமன்றத்திலே இந்தக்கிழமை கொணர்ந்த பொழுது எதிர்ப்புக் கட்சியினர் என்றும் இரத்தக் கொதிப்புள்ளார்கள் போல் பெருங் கண்டனப் பிரசங்கங்கள் செய்தனர். எதிர்ப்புக் கட்சியென்றால் ஆட்சிக் கட்சியாளர் எதை எடுத்துரைத்தாலும் அதற்கு மாறாகக் குதர்க்கம் செய்து பொழுது போக்கும் கட்சியாக அமைந்திருப்பதை ஒவ்வொரு விவாதத்திலும் உற்றுநோக்கின் அறிஞர்கள் அறிவார்கள்.

ஒருநாட்டின் சமூக வாழ்வுக்குரிய ஒழுக்கங்களை நாட்டி வைப்பதும் நெறியலாதவற்றை நீக்கிவிடுவதும் மக்கள் சார்பாகப் பாராளுமன்றம் புக்கவர்களின் கடமையாகும். படக்காட்சிகளிலே காட்டப்பெறும் கதைகளினால் நல்லொழுக்கத்துக்கு மாறான பழக்கவழக்கங்கள் நாட்டில மலிந்து வருவதை யாவரும் அறிவர். இந்த விதமான கேடுகளை இலக்கியம் என்ற பசுப்போர்வையிலே மறைத்தும் பொதுவுடைமை நாடுகள் இந் நாட்டுக்கனுப்பி இளைஞர்களின் இளம உள்ளங்களைப்பிழையான வழியிற் செல்லும் படி தூண்டிவிடுகின்றனர் என்பதை யார் மறுப்பார்கள்.

நன்று தீது என்ற பாகுபாடில்லாமல் எல்லாம் ஒன்றுதான் எனப் போலிச் சமாதானம் செய்து கொண்டு தீமை வளர்ந்து வருவதற்கு ஏதுவான செயல்களைத் தடுக்காமல் இருக்கும் ஆட்சி கொடுங்கோலல்லவா?

மாணுக்கர்கள் நல்லவற்றையும பொல்லாதனவற்றையும் எல்லாம் கற்றப்பின் கொள்ளக்கூடியன வற்றைக் கொண்டு தள்ள வேண்டியவற்றை விலக்கிவிடுதல் நன்முறையென்று யாராவது புத்திபுகட்டினால் அன்னவர் இந் நாட்டுக்கு கேடுவிளைவிக்கப் பிறந்த கோடரிக்காம்பாகவே கருதப்படுவர். அவ்வாறு தீமை பயப்பனவும் இடம்பெற வேண்டுமே யானல் மதுக்கடைகளை ஏன் ஒழிக்குதல் வேண்டும்! குற்றங்கள் ஏன் தண்டிக்கப்படல் வேண்டும்?

நூல்கள் எல்லாம் நூல்களல்ல. மொழிமரபுக்கிழுக்குடையனவாய் முன்னோர் வகுத்த முறைக்கு முரண்பாடானவையாய் ஒழுக்க நெறிக்கு ஒவ்வாதனவாயுள்ள உரைகளை அச்சமுத்தி நாணமின்றி அச்சமின்றி வெளியிடும் எழுத்தாளர்கள் மட்டுமன்று — அவற்றைப் பரப்புவோரும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் துரோகிகள் ஆவார். நெல்லினுட் பதர்போல் நல்ல நூல்களுடன் பொல்லாதனவும் கலந்து வருவதை அரசாங்கம் ஆராய்ந்து தடுப்பது பரோபகார சேவையாகும். அதைநாம் ஆதரிக்கின்றோம்.

### எங்கள் அறிவித்தல்

தை கஉ வெள்ளிக்கிழமை (14-1-55) தைப்பொங்கல் பொருட்டு சைவப்பிரகாச யந்திரசாலை இந்துசாதனக் காரியாலயம் என்பவை மூடப்பட்டிருக்குமென்று அன்பர்கள் அறியத்தருகின்றோம்.

அதிபர்.

அரசியலரங்

# ஆதிக்கக்கட்சி முடிவு சொல்ல அஞ்சுகிறதா?

## நாளை நாளையென்று ...
### நாட்போக்குதல் நற்குறியன்று!

முன்னம் ஒருமுறை 'அரச வரிசை மொழி சிங்களமே' என்று ஒரு ஆதிக்கக்கட்சி அங்கத்தவர் கொண்டு வந்த பிரேரணை பிரதமர் வரவில்லையென்று பின் போடப்பட்டது. இரண்டாம் முறை திரு. இரியக் கொல ஒருமுடிவுகாணலாம் என்று முயன்றார். திரும்பவும் நாழிகையும் நட்சத்திரமும் வாய்ப்பாகவில்லை!

இதன் மர்மமென்ன? யாழ்ப்பாணத்திலே பிரதமர் வெளியிட்ட பேச்சுக்கும் இந்தவிதமான காலப் போக்குக்கும் தந்திரங்களுக்கும் இடையிலே நடந்த காரியம் யாதோ?

ஐக்கிய தேசியக் கட்சி ஏமாற்றக் கட்சி என்று மூக்காலும் சத்தியஞ் செய்யும் திரு R. G. சேனநாயகவும் இக்கட்சிக்கூட்டத்தில் திங்கட்கிழமையன்று சமூகமாயிருந்தாராம். ஆம் அவர் இந்தியத் துவேஷ மந்திரோபதேசத்தால் மந்திரிசபையையும் ஆதிக்கக்கட்சியையும் தன்பால் இழுக்க முயல்கின்றார் என்பது யாவரும் அறிந்ததே.

குடியரசு கூட்டும் பிரேரணையும் பின்போடப்பட்டதாம். பிரதமரில்லாமல் நாடகம் நடைபெறுதென்றால் கட்சிக்கூட்ட நாளைக் குறிக்காமல் விட்டிருக்கலாமே........!

X X X

இந்த அரசிலையப்பாது காப்புச்சட்டம் சந்துக்குள் புகுத்தப்படவில்லை என்பதைத் தெரிவிக்கும் வகையில் இன்னமும் ஒருவாரத்திலே அது பாராளுமன்றில் கொண்டு வரப்படும் என்று இக்கூட்டம் முடிவு செய்திருக்கிறது. இச் சட்டத்தைப்பற்றி இந்து அங்கத்தவர்கள்வாயால் ஏதும் சொல்லாது 'அந்த நாளை' இன்னொருநாளைக்கு வைத்திருப்பதுவும் ஒரு மர்மமாகவேயிருக்கிறது!

அரிசிவிலை குறைக்கவும் ஆதிக்கக்கட்சிக்குப்பொருத்தமான நாள் வரவில்லையே!

### இந்து ஆலய சட்ட திட்டம்

திங்கட்கிழமை நடந்த கூட்டத்தில் இந்து ஆலய அறநிலையச் சட்ட திட்டம் 20-1-55-ல் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற இந்து அங்கத்தவர்கள் தீர்மானித்தனராம்.

—0—

### இலங்கைக்கு குடியரசு

1956-ம் ஆண்டில் இலங்கையைக் குடியரசாக்க வேண்டுமென்று அரசாங்க பாராளுமன்ற உபசபை ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றது.

### மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா வருகிற ஆனி மாசம் முற்பகுதியில் நடக்குமாம். இது பல அறிஞர்களால் ஆர்வத்துடன் வரவேற்கப்பெறுகின்றது.

### செயற்கைச் சந்திரன்

இயற்கையாய்எமக்கென அமைந்திருக்கும் சந்திரனை விட மற்றொரு சந்திரனை அமெரிக்கா அக்கிப் பூமியைச்சுற்றி இயங்க வைக்கக்கூடுமென்று விஞ்ஞான ஆராய்ச்சிப் பேராசிரியர் ஒருவர் அமெரிக்க வான சாஸ்திரிகள் சங்கக் கூட்டமொன்றிற் கூறினாராம்.

# சுதேச வைத்திய முன்னேற்றத்துக்கு வழி

சுதேச வைத்திய வெள்ளிவிழாவில்
வைத்தியர் திரு. ஏ. எஸ். இராசையா
செய்த சொற்பொழிவின் சாரம்

இலங்கையிற் தற்போது சித்த மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், மேலைத்தேய மருந்துகள் என நால் வகை மருந்துகள் கையாளப்படுகின்றன. முன்னைய மூன்றும் சுதேசமருந்துகள் ஆகும். எந்தெந்தத் துறையில் எவ்வெவ் மருந்துகள் திறமாகக் காணப்படுகின்றனவோ, அவ்வவ் விடங்களில் அந்தந்த மருந்துகளைக் கையாளவேண்டும். இதனுல் சிலர் சுதேச வைத்தியம் அழிந்து விடலாம் எனவும் வாதிப்பர் திறமான மருந்தென தெரிந்தால், அதை யார் தான் கைவிடுவார்கள். ஆதலால் நால்வகை இனங்களும் ஒன்று சேர்ந்து ஒரே வைத்தியமாக வர வேண்டும்.

இலங்கையிலே இருக்கும் நாலுவித மருந்துகளில் திறமையானவைகளை யெல்லாம் ஒன்றுசேர்த்து புதிய முறை ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவந்தால், திறமான மருந்துகளுக்காக மேற்கு நாடுகள் யாவும் கிழக்கை நோக்கி கையேந்துங்காலம், வெகு தூரத்தில இருக்கமுடியாது!

அகில இலங்கைச் சித்த ஆயுர்வேத வைத்திய சங்கம இதே கொள்கையைத் தான 1946-ம் ஆண்டு யாழ்ப்பாணம வந்த ஆயுர்வேத விசாரணைச் சபையிடம் எடுத்துக் கூறியது. குறித்த விசாரணைச் சபை அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தின், அறிக்கையை அநுவதித்தது.

சுதேச வைத்தியர்களாகிய நாம், அன்னியர் ஆட்சியால் நசுக்கப்பட்டோம். ஒடுக்கப்பட்டோம். அவமதிக்கப்பட்டோம். அப்படி இருந்தும் 85 வீத மக்கள் சுதேச வைத்தியத்தையே தஞ்சமடைந்தார்கள். நம்பிக்கையுடன் இன்றும் கைக்கொண்டு வருகிறார்கள்.

கரப்பா, மொகஞ்சதாரோ, சங்குதாரோ முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட, புதைபொருட்கள் எங்கள் கலைப் பெருமையையும், நாகரீகத்தையும் இப்போது வெளியாக்கின. இவ்வித கலைவளமுள்ள சாதியினரின் வைத்தியக் கலை சாமானியமாக இருக்கமுடியவே முடியாது! எங்கள் கலைகளிற் பல ஒளித்து வைக்கப்பட்டன! அவையாவும் ஒன்று சேர்த்து ஆராயும் இவ்வேளையில வைத்திருப்பவர்கள் அவற்றை உடனே வெளிப்படுத்த வேண்டும். எங்கள் சிவாயிர்தங்களை சஞ்சீவிகளை, பொதுசனநன்மைக்காக சித்தர்கள் வெளிப்படுத்தி எமக்குத் தந்தார்கள். அதுபோல இக்காலம் நாம, அவைகளை வெளிபபடுத்தி, ஒன்று சேர்க்காவிடில், எல்லாம அழிந்து விடும என்பது மறுக்கொணு உண்மை.

எங்கள் வைத்தியக் கலைகள், ஒருகாலம் அரசியரால் கவர்ந்து செல்லப்பட்டது. மிகுதி சிதறுண்டன. அவைகளை ஒன்றுகூட்டி சீரைப்படுத்த இராமதேவர் என்னும் சித்தர் தோன்றினர். இராம

(தொடர்ச்சி 5-ம பக்கம)

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்புமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிரூப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


### நகரசபைத் தலைவர் சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் பதவியிலிருந்து நீங்குகின்ற திரு. சாம் சபாபதி அவர்களுக்கு நகரசபைக் காரியாதிகாரி திரு. கே. சணமுகம் அவர்கள் தலைமையில் நகரசபை உத்தியோகஸ்தர் ஒரு பிரியாவிடை விருந்தளித்தனர். அத்தருணம் தலைவரோடு திரு. பி. நடேசன் முதலியோர் பேசும்போது, திரு. சபாபதி தலைவர்பதவி வகித்த காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு சுகாதாரம், மின்சாரசேவை, வருமானம், கல்வி முதலிய பலதுறைகளில் அவர் பெரும் முன்னேற்றம் உண்டாக்கினுரென்றும் அவர் தீர்க்க தரிசனத்துடன் திட்டங்களிட்டுச் சிறந்த முறையில் கடமை ஆற்றியமையால் இத்தகைய சித்திகளைப் பெற்ருரென்றும் அவரது முன்மாதிரியவராலும் போற்றிப் பின்பற்றத்தக்கதென்றும் பெருநன்றியறிதலுடன் புகழ்ந்து கூறினுர்கள்.

# ஐம்பெரும் குரவருள் ஒருவராகும் ஆசிரியர்

## மாணவருக்கு முன்மாதிரியாகி வழிகாட்ட வேண்டும்

ஒவ்வொரு மாணவனும் ஒரு காலத்தில் ஆசிரியனுகாதுபோனுலும் ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயமாக மாணவராயிருத்தல் அவசியம். நூற் கல்வி மாத்திரமன்றி பிற கலைகள் எவற்றையும்பயிற்றுவிப்பவனும் ஆசிரியன் ஆவான். மாணவர்களின் மனதைப் பண்படுத்தி மனிதராக்குபவர் ஆசிரியராவார். மாணவர்கள் தங்கள் வாழ்நாளின் மிகச் சிறந்த பாகமாகிய

### 'சிவ தொண்டன்'

இளமைப் பருவத்தை ஆசிரியரிடத்துக் கல்வி கற்றலில் செலவிடுகிருர்கள். இந்தக் காலத்திலே ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே நெருங்கிய தொடர்பேற்படுகின்றது. இத்தொடர்பினுல் ஏற்படும அன்பு பக்தி என்பனவற்ருல் ஆசிரியவுலகும்மாணவவுலகும் பெரும் நன்மை அடைகின்றன. ஆசிரியரது உயர்ந்த கல்வி, அறிவு ஒழுக்கம் ஆகியவற்ருல் மாணவர் நன்மை பெறுகின்றனர். களங்கமற்ற இளைஞர்களது தொடர்பால் ஆசிரியருள்ளம் ஊக்கமும் மகிழ்ச்சியும் பெற்று அன்பைச் சுரக்கின்றது.

தொழில்களுள்ளே மிகச் சிறந்த தொழில் ஆசிரியத் தொழில் என்பர். பருவங்களுள் மிகச் சிறந்த பருவமும் மாணவப் பருவம் எனலாம். நூல்கள் அச்சேருத மிகப் பழைய காலத்திலே எவ்வகை அறிவையும் ஆசிரியர்மூலமாகப் பெறுதலே சாத்தியமாய் இருந்தது. மாணுக்கர் குருகுல வாசகராகி ஆசிரியரோடு உடனுறைந்து அவர் உளம் உவப்பப் பணி செய்து அவர்பால் வித்தை கற்றனர். சக்கரவர்த்தியின் குமாரராயினும் ஆசிரியர்க்கு அமைந்த ஒழுகி அறிவுரை பெற்றனர். அரசர்க் கரசனுகிய பாஞ்சாலனும் ஏழைப்பிராமணராகிய துரோணரும் ஒரு குருவின் கீழ் அமைந்து ஒழுகிய மாணவராவர். ஏன், ஏகலைவன் ஆகிய வேடனும் அருச்சுனனும் ஒரு குருவின் பக்தர்களே.

வருங்கால உலக மக்களை ஆக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியரைச்சாரும். எனவே ஆசிரியராய் இருப்போர் அதற்குத் தகுதியான குணநலன்கள் உடையராதல் வேண்டும். மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியம் ஆசிரியரைப்பற்றிக் கூறுமிடத்து ஆசிரியர் மலை, நிலம், பூ, துலாக்கோல் போன்ற மாட்சிமையுடையராயிருத்தல் வேண்டும் எனக்கூறும். மலைபோன்ற அளவிடமுடியாத அருமை பெருமை அகலமும் அளத்தற்கருமையமாம் இயல்பும், நிலம்போன்ற பொறுமையும் செயல் திறனுக்கேற்ப விளையும் வண்மையும், தன்னைச் சேர்ந்தோர்க்குக் கொடுத்து உயர்த்துதலுமாகிய இயல்பும், மலர்போன்ற மங்கலமும் நறுமணமும், அவ்வககாலத்துக்கே மலர்தலும் வண்டை ஏற்று அளித்தலும், கண்டவர் மகிழ்ச்சியெய்துதலும், விரும்புதலும் ஆகிய இயல்பும் துலாக் கோல் போன்று ஐயம்தீர்த்தலும் நடுவுநிலையுடைமையும் ஆகிய இயல்புடையோரே ஆசிரியராகத் தகுதியுடையார் எனத் தொல்காப்பியம் கூறும். மாணவர் இயல்பைக்கூறுமிடத்து பாலையும் நீரையும் பிரித்தறியும் அன்னத்தின் இயல்பும், கூறியதைக் கூறும் கிளியின் தன்மையும், நல்லவையை உள் வைத்து கெட்டதைப் புறத்திடும் கெய்மரி இயல்பும், தன் கூட்டம் முழுவதையும் பாதுகாக்கும் யானையின் இயல்பும் பிறந்த ஒலியின் பெற்றி யோர்ந்துணரும் ஆனேற்றியல்பும் உடையராதல் வேண்டும் என்பர். இங்ஙனம்மாட்சிமைப்பட்ட ஆசிரியர்களிடத்து உன்ன்த இயல்புடைய மாணவர் கல்வி கற்ருல் நன்மையே விளையும் என்பதில் ஐயமின்று.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# சிங்களமும் தமிழும்

## அரச கரும மொழிகளாகுமென்று தீர்மானம்

சிங்களமும்தமிழும் அரச கரும மொழிகளாகவேண்டும், அவை படிப்படியாகப் பாடசாலைகளில் போதனுமொழிகளாகவேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது: ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்களில் மாத்திரமன்றி அதற்கு மேற்பட்ட வகுப்புக்களிலும்கூட சுயபாஷைகளில் பாடப்போதனை நடத்துவதற்குப் போதிய பாடப்புத்தகங்களும் ஆசிரியர்களும் இருப்பதாகச் சில தலைமையாசிரியர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். ஆசிரியர்கள் பாடபுத்தகங்கள் முதலியன சம்பந்தமாக மற்றும் சில தலைமையாசிரியர்கள் முரண்பட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்கள்.

### ஆறு கடமைகள்

சுயபாஷைகள் சம்பந்தமான கொள்கையை அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டுவிட்டதால் பின்வரும் கடமைகளை நிறைவேற்ற உடனடியாக ஒரு ஸ்தாபனத்தை நிறுவ அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது:—

(1) அரசகருமச் சொற்களுக்கும் சொற்ருெடர்களுக்கும் ஒரு சொல்லகராதியைத் தயாரித்தல்.

(2) சிங்களத்தையும் தமிழையும் அரசகருமமொழிகளாகப் பாவிக்க தற்போதைய அரசாங்க ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்

(3) சட்டநிர்வாகவெளியீடுகளைச் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தல்.

(4) பொறுக்கியெடுக்கப்பட்ட மாணவர்களுக்குச் சிங்களத்திலும் தமிழிலும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து (டைப்பிங்) படிப்பிக்க வகுப்புக்களை நடத்துதல்.

(5) மொழி பெயர்ப்பு, தொகுப்பு நிலையமொன்றை நிறுவுதல்.

ஏனைய பாஷைகளிலுள்ள முக்கிய நூல்களைச் சுயபாஷைகளில் மொழிபெயர்த்தல், பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளுக்கு அவசியமான புத்தகங்களை மொழிபெயர்த்தல், எழுதுதல் முதலிய வேலைகள் இந்த நிலையத்திடம் ஒப்படைக்கப்படும். அரசகருமச் சொற்களுக்கான சொல்லகராதியைத் தொகுக்கும் பொறுப்பும் இந்த நிலயத்திடம் ஒப்படைக்கப்படும். விஞ்ஞானத்துறையிலும் மொழித்துறையிலும் ஏனைய அறிவுத்துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களைக் கொண்ட விசேஷ சபைகள் இந்த நிலையதநில் இருக்கும். சிங்களத்திலும் தமிழிலும் பொருத்தமான தொழில் நுட்பச் சொற்களைத் தயாரிப்பதும் ஆங்கிலச் சொற்களுக்குச் சமமான சொற்களைக் கண்டுபிடிப்பதும் இவர்களின் கடமையாகும். இந்தப் பலதரப்பட்ட சபை செய்து முடிக்கும் வேலைகளை ஒருமுகப்படுத்தும் பொறுப்பு மொழிபெயர்ப்புத் தொகுப்பு நிலையத்தைச் சாரும்.

### ஆராய்ச்சிநிலையம்

(6) மொழிபெயர்ப்பு, தொகுப்பு நிலையத்தைத் தவிர ஆராய்ச்சி நிலையமொன்றும் ஆரம்பிக்கப்படவேண்டும். நமது மொழிகளில் இன்றுள்ள குறைகளை அகற்ற முயற்சிப்பது இதன் பிரதானநோக்கமாக இருக்கும். மொழி வளர்ச்சிக்காக ஆராய்ச்சி நிலையம் சஞ்சிகைகளை வெளியிடவேண்டும். அரசாங்கசபையின் பொறுக்குச்சபையின் அறிக்கையில் (1946 ல் அரசாங்க அறிக்கை 22) கண்ட தற்காலிக பயிற்சித் திட்டங்களையும் தயாரிக்கலாம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம



# நிலவுலக மக்களுக்கு நீர் தரும் உணர்ச்சி

## மேலான சைவநீதி விளங்கச் செய்வது

உலகத்தில் அவசியமான பொருட்கள் எவை என்று ஆராயப்புகின் காற்று, நீர், நிலம் என்ற பஞ்சபூதங்களின் மூக்கூறுகளும்தான் என்பது புலனாகும். நெருப்பை மனிதன் கண்டுபிடிக்க முன்பே இவ்வுலகத்தில் வாழ்ந்தானெனச் சரித்திர நூல்களிற் படிக்கிறோம். ஆனால் நிலம், நீர், காற்று இவை மூன்றும் மனிதன் கண்டுபிடிக்காமலே அவர்களுடன் இயங்கி வந்திருக்கின்றன.

மழை பெய்வதால் வருவது நீர், மழை பெய்யாத இடங்களில் நீர்வளம் கிடையாது அவைகள் பாலைவனங்களாகக் காட்சியளிக்கும். நீர் வளம் மிக்க நாட்டையே மக்கள் விரும்புவர் தெய்வத் தலங்களின் பெரும் பகுதி தண்ணீர் கொழிக்கும் ஆற்றங்கரைகளில் இருப்பதைப் பார்க்கலாம்.

ஒரு அரசன் முடிசூட்டும் போதும் திருமணம் முதலிய மங்கல கருமங்கள் நடக்கும் போதும், ஒரு நாலைத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் மங்கள வாழ்த்துக் கூறுதல் பண்டைய தமிழ் மக்களின் மரபு. அவ்வாறே ஓர் அரசனை வாழ்த்தவந்த ஔவையார் "வரப்புயர" என்று பாடினார். அதன் பொருளை விளங்காத சபையோருக்கு வரப்புயர்ந்தால் நீருயரும் நீருயர்ந்தால் நெல்லுயரும், நெல்லுயர்ந்தால் குடி உயரும், குடி உயர்ந்தால் கோன் உயரும், என்று விளக்கம் கொடுத்தார். மழை நீர் இல்லா விட்டால் நெல்லு மாத்திரமா புல்தானும் முளையாதே

"விசும்பிற் றுளி வீழினல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பதரிது"

என்று வள்ளுவர் கூறினர்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் தமது நூலில் வாழ்த்துக்கூறும் முறையைப் பார்ப்போம். சைவசமயம் தழைக்க வேண்டுமென்பது அவரது ஆசை. அதனால் அதற்குத் தகுந்த சூழ்நிலை அமைய வேண்டும். பஞ்சமும் பசியும் கோர தாண்டவமாடும் ஒரு நாட்டின்கண் சமய போதனை செய்வதால் ஒரு பலனும் ஏற்படாது. எனவே நன்மையான சூழ்நிலை வேண்டும் என்றால் அதற்கு என்ன முதலில் வேண்டும். வானம் பெய்ய வேண்டும். இக் கருத்திலே திருவள்ளுவர் முறையும் கச்சியப்பர் முறையும் ஒத்துப் போகின்றன. வானம் வறட்சியுமாயின் பூசைகள் நடைபெறு

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

எனவே வான்முகில் தவறாது மழையைப் பெய்யவேண்டுமென நினைக்கிறார். இறைவன்தான் மழையைப் பொழிவிக்கிறான். மழை பெய்யாவிட்டால் இறை வழிபாடு செய்து மழை வேண்டுதல் தமிழ் நாட்டில் தற்காலமும் நடைபெறும் வழக்கம். இதனாலேயே கச்சியப்பர் தமது வாழ்த்துப் பாவில "வான் முகில வழாது பெய்க" என்று தொடங்குகின்றார்.

மழைபெய்வதனால் ஆறுகள் பெருகி ஓடும் நீர் நிலைகள் நிறைந்திருக்கும் பயிர் செய்வோர் நிலத்தைப் பண்படுத்தி

ஸ்ரீ வ. குகசர்மா வரைவது

பயிர் செய்வார்கள். பயிர் செய்த உணவுப் பொருட்களை பல இடங்களிலும் கொண்டு போய் வித்துப் பொருள் சேர்ப்பர். அந்தப் பொருளைக் கொண்டு பல பொருள்களை விலைக்கு வாங்குவர். புண்ணியங்களைச் செய்வர், பல முன்னேற்றங்களுக்குழைப்பர். இவ்வாறு பல வளங்களும் பெருகும்.

செல்வம் இருந்தால் மட்டும் போதுமா? அதைக்காப்பாற்ற அரசன் வேண்டும், பயிர்களை செழித்து வளர மழை எவ்வளவு அவசியமோ அவ்வளவு குடிகளை சந்தோஷமாகப் பயமின்றி வாழ நல்ல அரசன் தேவை "வானோக்கி வாழும் உலகெல்லாம மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி" என்பது குறள். மன்னவன் செங்கோல் உடையவனாய் இருந்தால்தான் தருமம் நடக்கும். அவனது செங்கோல் வாழ வேண்டும். அவ்வாறு அவன் அரசு செய்வதனால் உலகமக்கள் ஒரு குறைவுமின்றி வாழ்வர். எனவே "கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க" என்று கூறுகிறார்.

அவ்வாறு அரசனும் செங்கோல் உடையவனாயிருந்து உயிர்கள் குறைவற்று வாழுமானால் நான்மறைகள் ஓங்கும் வேள்விகளும் மல்கும். அவ்வாறு சைவசமய ஒழுக்கங்கள் வளரவே சைவசமயம் உலகமெலலாம் பரவும்.

வானம் பொழிந்து நாடு சிறந்து செங்கோல் சிறக்க அதனால் குடிகள் பயமின்றி வாழ நல்ல தவங்கள் வேள்விகள் மல்க மேன்மையுடைய சைவநீதி பரவட்டும் எனக் கச்சியப்பர் கூறுகிறார்.

## குடியும் — குதிரைப் பந்தயமும்

குடியையும் குதிரைப் பந்தயத்தையும் இலங்கையிலிருந்து நீக்குவதற்குச் சட்டம் அமைக்க வேண்டுமென ஸ்ரீ டட்லி சேனநாயக ஒரு பிரேரணைக்கு அரசாங்க பாராளுமன்றக் கட்சிச் சபையில் முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்.

## பணம் பொருள் ஆராய்ச்சி

பணம் பொருள் ஆராய்ச்சி நிலையமொன்று நீர்வேலியில் கரந்தன் சர்வோதய ஆச்சிரமத்துக்கண்மையில் அமைப்பதற்கு ஒழுங்கு செய்யப்படுகின்றதாம்.

## காரைநகர் சைவமகாசபை

நிகழும் மார்கழி மாதம் ௨௫ந்திகதி (9-1-55) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மேற்படி சபை ஆதரவில் தமிழ்ப் புலவர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள் "அப்பர் சென்ற அருள்நெறி" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த சைவப் பிரசங்கஞ் செய்தனர். தலைமை வகித்த விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் எம். ஏ. கந்தையா அவர்கள் குறிப்புரை கூறினர்.


## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட நூல்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| கந்தபுராணம்வசனம் | 5 | — |
| திருவிளையாடற் புராணம். செய்யுள் | 3 | 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் | 2 | — |
| பாரதம் ஆதிபருவம் உரை | 3 | 50 |
| சேது புராணம் | 3 | — |
| இராமாயணம் — பாலகாண்டம்(குறிப்புரை) | 2 | 50 |
| நன்னூற்காண்டிகையுரை | 3 | 50 |
| ,, விருத்தியுரை | 3 | 50 |
| அருட்பா | 1 | 75 |
| சைவசமய நெறியுரை | 1 | 25 |
| பெரியபுராண வசனம் | 2 | 50 |
| பெரியபுராணம் செய்யுள் | 5 | — |
| நாவலர் சரித்திரம | 1 | 25 |
| இலக்கணச் சுருக்கம் | 1 | — |
| சைவவினாவிடை (1) | — | 20 |
| சைவவினாவிடை (2) | — | 65 |
| முதலாம் பாலபாடம் | — | 20 |
| இரண்டாம் பாலபாடம் | — | 35 |
| மூன்றாம்பாலபாடம் | — | 65 |
| நான்காம் பாலபாடம் | 1 | 75 |
| சிவாலய தரிசன விதி | — | 20 |
| அபிராமியந்தாதி யுரை | — | 25 |
| திருக்குறள் உரை | 5 | — |
| திருக்கோவையார் உரை | 3 | — |
| தொல்காப்பியம் சூத்திரவிருத்தி | 1 | 50 |
| திருமுருகாற்றுப்படை | — | 25 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | 1 | 25 |
| அகத்தியர்தேவாரத்திரட்டு | — | 25 |
| நித்திய கருமவிதி | — | 15 |
| பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு | — | 15 |
| கந்தரலங்காரம்,கந்தரனுபூதி | — | 15 |
| மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற்போற்றிக் கலிவெண்பா | — | 05 |
| விநாயக கவசம் | — | 10 |
| சரஸ்வதி யந்தாதி | — | 05 |
| தண்டிவிநாயகர் திருவருட்பா | | 05 |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
சைவப்பிரகாசயந்திரசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.



## சாலாமிஸ்ரி லேகியம்

இசனல் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப்பொருமல் புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, வெள்ளை, சூலை, சந்துவாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி வஜ்ரம் பலம் முதலானவை உண்டாகும்

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக் கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்ச் சாறுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒரு இறாத்தல் விலை ரூபாய் 25-00
அரை ,, ,, 12-50
கால் ,, ,, 6-25.

வி. பி. பி. செலவு பிரத்தியேகம் வி. பி. பி. மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

விலாசம்:
K. ஆறுமுகம்பிள்ளை
இலக்கம்: 3/1 தட்டாதெரு,
கோட்டை முனை,
மட்டக்களப்பு.

[M 153 29-10]


# ஐம் பெரும் குரவருள் ஒருவராகும் ஆசிரியர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயின், இக்காலத்தில் ஒழுக்கத்தால் உயர்ந்தோர் தாம் ஆசிரியராகவிருக்கின்றாரில்லை. கல்விச்சாலைகளிலே பல தரப்பட்ட மாணாக்கரையும் ஆசிரியரையும் காணலாம். மாணாக்கர்கள் ஆசிரியர்களைப் பாடம் சொல்லிக் கொடுக்கும் யந்திரமாக மதிக்கிறார்களேயன்றி ஆழ்ந்த குருபக்தியை இன்று காம் காணமுடியாது. ஆசிரியரின் முன்மாதிரியைப் பின்பற்றும் ஒருசில நன்மாணாக்கர்களும் ஆசிரியர் விழுப்பமற்ற ஒழுக்கம் உடையராயிருப்பின் அவரின் இழிந்த ஒழுக்கங்களைத் தாமும் பழகிக்கொள்ளுகிறார்கள். மாணாக்கரது கல்விக்கு மாத்திரமன்றி ஓரளவு அவர்களின் ஒழுக்கத்துக்கும் ஆசிரியரும் பொறுப்பாவார். நன்மாணாக்கர் மாத்திரமே கல்வி கற்றல் என்பது நியாயமானதல்ல. எத்தகைய இழிந்தோரும் ஒரு சிறிதாவது கல்விகற்றல் அவசியம். பெரும் படிப்பாளியாகாவிட்டாலும் உலகில் ஒவ்வொருவரும எழுதப் படிக்கத் தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். எனவே மாணாக்கர்கள் பல தரப்பட்டவர்களாகவே இருப்பார்கள். மாணாக்கர்கள் எத்தகையோராயினும் ஆசிரியர்கள் சிறந்தவர்களாகவே அமைதல் வேண்டும். ஆசிரியர் மாணாக்கரின் அறிவுக்கு வழிகாட்டிகளாவதோடு அவர்கள் கண்முன்காணும் எடுத்துக்காட்டுமாவார்கள். ஐம்பெரும் குரவர்களுள்ளே ஆசிரியரும் ஒருவராக வைத்து எண்ணப்படுவர். தன்னை நன்னிலையில் நிறுத்தலோடு தன் மாணாக்கரையும் நன்னிலையில் நிறுத்துதல் ஆசிரியர் கடனாகும். மாணவர்களை அடித்துப் பயமூட்டி அறிவு புகட்டுபவர் நல்லாசிரியர் ஆகார். மாணவர் ஆசிரியர்களுக்கிடையில் உயர்ந்த அன்புத் தளை இருத்தல் வேண்டும். இந்த அன்புப் பிணைப்புத்தான் அறிவுப் பிணைப்பையும் ஏற்படுத்தும். ஆசிரியர்கள் உயர்ந்த அறிவும் பண்பும் ஒழுக்கமும் உடையராய் இருந்தால்தான் மாணவருலகம் அறிவிலும் ஒழுக்கத்திலும் முன்னேறும். இதனால் அகில உலகமும் முன்னேறும்.

## வட இலங்கைக்கு வேண்டிய துறைமுகம்

துறைமுகமொன்று வட இலங்கைக்கு இன்றியமையாத வேண்டப்படுகின்றதென்றும் காலந் தாழ்த்தாது ஒன்று திறக்கப்பட வேண்டுமென்றும் யாழ்ப்பாண மக்கள் பலமுறைகளில் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தி வந்தனர். அரசாங்கமும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நியாயம் சொல்லி அக்காரியத்தைப் பின்போட்டு வந்தது. இப்பொழுது வடமராட்சி நீர்மூழ்த்தொழிலாளர் சம்மேளத்தார் வல்லுவெட்டித்துறையை அல்லது பருத்தித்துறையைத் திறந்து வைக்கவேண்டுமென்று விண்ணப்பமொன்று சமர்ப்பித்துள்ளனர். துறைமுகமின்மையால் பொதுவாக வடபகுதி மக்களுக்கும் சிறப்பாக வல்லுவெட்டித்துறை வாசிகளுக்கும் உண்டாகும் நட்டத்தைப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

# பிழையான பரீட்சை முறை?

## ஆசிரியர்களே முக்கிய காரணர்

[ஸ்ரீ. ஸி. இராசகோபாலாச்சாரியார் நாகபுரி சர்வகலா சாலைப் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒருபகுதி.]

"கேள்விகளுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கும் பரீட்சை முறை நமது கல்வித் திட்டத்தில் பெரும் பிசாசாக அமைந்து விட்டது. ஆசிரியர்களிடம் அவநம்பிக்கை, சரீர உழைப்பு வேலையை விடுத்து குவியான சுக வாழ்வு வேலையை நாடுவது இவையே அதன் முக்கிய காரணம்"

தற்போதைய கல்வி முறை பற்றிக் குறை சொல்லாதவர் இல்லை; அதிருப்தி அடையாதவர் இல்லை. எல்லோரையும் சமமாக நடத்தவேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையைப் பின்பற்றி நாம் கல்வித் துறையில் தவறுகள் செய்கிறோம். கல்வியில் பிற்பட்டவர்களுக்கு உதவுவதற்காகப் பிள்ளைகளை நாம் இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஒன்று கல்வி அறிவுள்ள குடும்பப் பிள்ளைகள்; இரண்டாவது எழுத்து வாசனையே யில்லாத குடும்பப் பிள்ளைகள். இவ்விதம் பிரிவினை இல்லாமல் ஒன்று சேர்ந்து ஒரு முறையில் கல்வி கற்பதும் ஒரே சமமாக நடத்துவதும் உண்மையில் சமத்துவமே இல்லை; மிகுந்த பாதகத்தையே உண்டுபண்ணுகிறது. பிரிவினை செய்து கல்வி கற்பிக்க முயன்றால்தான் அறியாமையைப் போக்கிக் கல்வி அறிவைத் துரிதமாக வளர்க்கலாம்.

மற்றொரு முக்கிய கருத்தையும் கூற விரும்புகிறேன். இதில் எனக்கு அபார நம்பிக்கை; ஏன்? அதை என் மதம் என்றே சொல்வேன். ஆரம்பக் கல்வி கற்பிக்கும் காலத்தில் உடலுழைப்பிற்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டும். நமது சமுதாய வாழ்வில் பிறர் உடலுழைப்பில் வாழ்வோர் உண்டு. ஆனால் அம்மாதிரிப் பெரும்பான்மையோர் வாழ்வது ம் எதை அடிப்படையாகக் கொண்டு தேசிய வாழ்வு அமைவதும் முடியாது.

பிறர் உடல் உழைப்பைப் பயன்படுத்தி அவர்கள்மீது அட்டைகள்போல் ஒட்டிக்கொள்ளும் தீங்கை ஒழிக்க வேண்டும். குவியான வேலையை நாடும் சமூகத்தால் நாடு முன்னேற்றமடையாது; மக்கள் சுபிட்சமாக வாழவும் முடியாது.

கல்வி கற்பதில் காதால் கேட்பதற்கு இப்பொழுது முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. இந்த முறை மாற்றப்பட வேண்டும். எழுதுவதைத் தெரிந்துகொண்டு எழுதவும் தெரிந்தபிறகே மேலும் மேலும் கல்வி அபிவிருத்தி என்றால் அது அபிவிருத்தியேயல்ல.

எந்த வேலையையும் கடவுள் இட்ட கட்டளையாக மதித்துச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அதில் வெற்றியோ தோல்வியோ நமக்குத் திருப்தியையும் சாந்தியையும் கொடுக்கும். இதனால்தான் மதம் ஒருவனுக்கு அவசியமென்கிறோம்.

எந்த மதமாயினும் அதன் அடிப்படைக் கொள்கை மூன்றுதான். ஆத்மா அழிவற்றது. மனத்தாலும் பேச்சாலும் செயல் முறையாலும் செய்யும் ஒவ்வொன்றிற்கும் பயன் உண்டு. அதன் பயனை அனுபவித்தே தீரவேண்டும். கடவுளுக்கு அடிமையாகவிருந்து மனதையும் நடைமுறையையும் அதற்கேற்ப அமைத்துக்கொள்வது. இவையே மதத்தின் கொள்கைகள்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினராயும் லண்டனில் பொலிஸ் மாஜிஸ்திரேட்டாயும் இருந்த சேர். பர்ட்டான்ட் வாட்ஸன் குறைந்த சம்பளம் வாங்குவோரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தும் பொதுவாகக் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன, மக்கள் மீது மதத்திற்கு இருந்த பிடிப்பு போய்விட்டதே இதற்குக் காரணம்" என்று சமீபத்தில் சொன்னார். சமூகத்தில் மக்கள் நல்லது, கெட்டது, பாவம், புண்ணியம் என்று சீர்தூக்கிப் பார்த்துச் செயலாற்ற முற்படாவிட்டால் அத்தகைய சமூகம் அழிவுப் பாதையில்தான் துரிதமாக முன்னேறிச் செல்லும்.

பொருளாதார சுபிட்சம் நல்லதுதான். ஆனால் அதற்கு அடிப்படையாக விதியும் இருக்கிறது. மக்கள் ஒருவருக்கொருவர் நேசபான்மையுடன் இருக்க வேண்டும். பரஸ்பரம் நம்பிக்கை வைக்க வேண்டும். தீமையை வெறுக்கவேண்டும். அதில் தான் உண்மைச் சுபிட்சம் இருக்கிறது!"

---

### உயர்தர கல்விப் பட்டதாரிகளுக்கு இந்தோனேசியாவில் உத்தியோகம்

இந்தோனேஷிய கல்வித் திட்டத்தில் ஆங்கிலம் இடம் பெறச் செய்தற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்தால் ஏற்பட்ட ஆங்கில ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்தற்கு இலங்கையிலிருந்து ஆயிரம் உயர்தர கல்விப் பட்டதாரிகளை இந்தோனேஷியாவுக்கு அனுப்பத் தக்கதாக இலங்கை அரசாங்கப் பிரதிநிதி ஸ்ரீ மாணிக்கம் சரவணமுத்து இந்தோனேசிய அரசாங்க அதிகாரிகளுடன் ஆலோசிக்கின்றாரென அறியவருகின்றது.

---

### சுதேச வைத்திய முன்னேற்றத்துக்கு வழி

2-ம் பக்கத்தொடர்ச்சி

தேவர் மெக்கா சென்று, அராபியர் மதத்திலே சேர்ந்து சுன்னத்துச் செய்து, கலை முழுதும் பயின்று, திரும்பி வந்து நம நாட்டிலே, தமிழில் திறம்பட எழுதி வைத்திருக்கிறார். அவர் நூல்கள் ஒழுங்காய் இருக்கின்றன. அதுபோல இன்னொருமுறை, மேலைத்தேயங்கள் எங்கள் வைத்தியக் கலைகளைக் கொண்டு சென்றன. நம நாட்டின் மேதாவிகள் மேல்நாடு சென்று, வைத்தியம் கற்றுவந்திருக்கிறார்கள் இவர்களே இங்குள்ள தற்கால "டாக்டர்" ஆவார்கள். இவர்களில் 90 வீதமானோர் நம நாட்டிற்கு அருஞ் செல்வங்களான, சஞ்சீவிகளை அறியார். சிலர் இப்போது அறிய ஆவல் கொள்கிறார்கள்.

இவ்விஞ்ஞானிகளின், உதவி எங்களுக்கு அவசியம் தேவையாகும். குறித்த ஒரு நோய்க்குக் கொடுபட்ட மருந்து எப்படி வேலை செய்கிறது என்பதை, பலவித பரீட்சைகளாலும் அறிந்து அவர்களாற் சொல்ல முடியும். இந்த மேலைத்தேய வைத்தியர்களும், இப்பணியில் ஒத்துழைத்தால், அரசாங்கம் ஒத்துழைக்கச் செய்தால், உண்மையான எங்கள் நாகரீகம், ஆதியிலிருந்த நிலையை விரைவில் அடைதற்கு ஏதுவாகும்.

சுதேச வைத்தியத்திற் திறமைசாலிகளான பலரை, ஒன்று சேர்த்தல் வேண்டும். அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரித்தல் வேண்டும். அக்குழுக்களால், நாடி, நோய் நிதானம், மருந்து பழைய சாஸ்திரங்கள் நிரைப்படுத்தல் முதலிய வேலைகள் செய்யப்பெறுதல்வேண்டும். அவைகளுக்கு ஏற்ற உதவிகளை அரசாங்கம் செய்துதர வேண்டும்.

மருந்துகளைத் தயாரிக்கக் கூடிய ஒளடதசாலையும், அரிய மூலிகைகளையுடைய மூலிகைத் தோட்டமும், பொது வைத்திய வாசிகசாலையும், சுதேச வைத்தியக் கலையை வளர்த்தற்கு, இன்றியமையாத சாதனங்கள். அவைகளை அரசாட்சியார் உடனேயே அமைத்துக் கொடுத்தல் வேண்டும். இவைகளைச் செய்யாது விட்டால் முன்னேற்றம் அசாத்தியமாகும்.

வாழ்க நம் வைத்தியக்கலை.

---

### சர்வகலாசாலைத் துணை வேந்தர்

இலங்கைச் சர்வகலாசாலைக்குத் துணைவேந்தராக வைத்திய கலாநிதி சேர். நிகலஸ் ஆற்றிகல தெரிவு செய்யப் பெற்றிருக்கிறார்.

---

### திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை சைவப் பிரசங்கம்

நிகழும் ஜயவருட தைமீ 2-ம் திகதி (15-1-55) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் முத்தமிழ் மணி பிரமஸ்ரீ C.S.S. மணி ஐயர் பாகவதர் அவர்களால் "பூசலார் நாயனாரும் சைவத் திருப்பணியும்" என்னும் பொருள்பற்றி ஓர் கதாப்பிரசங்கமும், தைமீ 4-ம் திகதி (17-1-55) திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் மேட்டுத்தெரு விவேகானந்த சபை மண்டபத்தில் "திலகவதியம்மையார்" என்னும் பொருள்பற்றி ஓர் கதாப்பிரசங்கமும் நிகழ்த்துவாரென அறிகின்றோம்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு காரைநகர் வடக்கு அப்புத்துரை மகன் முத்தாபரணம் இவ தனது புருசன் யேசுப் செல்லையா குணநாயகத்துக்கு எதிராக யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 775-ம் இலக்கத்தில் வழக்கு வைத்துக் கல்யாணப் பதிவைத் தள்ளியிருக்கிறார்.

வழக்காளி.

இல. 11228

1. காரைநகர் கிழக்கு ஆறுமுகம் கதிரவேலுவும்பெண்
2. ஷை நல்லம்மாவும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 11228 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1955-ம் ஆண்டு மாசி மாதம் 19-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1503-00 இதில் ரூபா 1000/=க்கு 10-6-54 தொடக்கம் 14-9-54 வரைக்கும் வருட மொன்றுக்கு 100-க்கு 8வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் வருட மொன்றுக்கு 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 192-85.

**காணிகளின் விபரம்**

1. திவப்பகுதி காரைநிவக் கோவிற்பற்று வலந்தலை இறை வீமாசிட்டி நிலப்பரப்பு 7 குளி 15½ம் பனைகள் வடலிகளும் வான்பயிர்களும் கிணறும்; எல்லை கிழக்கு கனகசபை திருநாவுக்கரசுவும் மற்றும் பேரும், வடக்கு கந்தப்பு இராமநாதனும், தில்லையம்பலம் கைம்பெண் அபிராமனும், கந்தப்பர் வயித்திலிங்கமும் பங்காளரும், மேற்கு வீரபத்திரப்பிள்ளை சிவசுப்பிரமணியமும் பங்காளரும், தெற்கு பொன்னம்பலம்பெண் செல்லம்மாவும் பின்னால் சொல்லப்படும் இரண்டாம் காணியும் இதடங்கலும்.

2. ஷை தங்கோடையும் வலந்தலையும் இறை வீமாசிட்டி தொட்டைப்புலமும் வீமாசிட்டியும் நிலப்பரப்பு முக்கால் (¾) எல்லை கிழக்கு கனகசபை திருநாவுக்கரசுவும் மற்றும் வடக்கு மேற்சொல்லிய முதலாங் காணி மேற்கு பொன்னம்பலம் பெண் செல்லம்மா தெற்கு சண்முகம் கைம் பெண் பொன்னுப்பிள்ளை. இதில் மேற்கெல்லைக் காணிக்குப் போக்குவரவு செய்யும் ஒழுங்கை உரித்து நீக்கி இதடங்கலும். இதன் தெற்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையருகால இக் காணிக்கும் இதன் வடக்கெல்லைக் காணிக்கும் போக்கு வரவு செய்யும் நாலுமுழ அகலக் கையொழுங்கைப் பாவிப்புரித்தும்.

ஆ. ச. கந்தையா
A S Kandiah.
கொம்மிஷனர்.

காரைநகர்
8-1-55.

M 206 14-1-55

---

### சுயமொழித் தீர்மானம்

சிரேட்ட தராதர வகுப்புகளுக்கு (9—10) 1957 ம் ஆண்டுக்குள் சுயமொழி போதனா மொழிகளாகும் என்றும், தாய் மொழி, தமிழ் அல்லது சிங்களமாயில்லாதவர்கள் குறித்த பரீட்சைக்கு ஆங்கிலத்தில் எழுதலாமென்றும், வேண்டிய புத்தகவசதி ஆசிரியர் வசதி இல்லாத இடங்களில் ஆங்கிலத்திற் கற்பித்தற்கு கல்வி அமைச்சர் அனுமதி கொடுக்கலாமென்றும், ஏகமனதாக மந்திரி சபை தீர்மானித்திருக்கின்றது. கணக்கு விஞ்ஞானப் பாடங்கள் ஆங்கிலத்திலும் கற்பிக்கலாமென்பது குறித்த விதிக்கு விலக்காக விடப்பட்டிருக்கின்றது.

தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளும் அரசாங்க கரும மொழிகளாகும் என்றும் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

---

### எலிகள் உண்டாக்கும் அழிவு

கந்தளாய்த் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட நெல் வயல்களுக்கு எலிகளாற் பெரும அழிவு ஏற்பட்டிருக்கின்றதாம். இந்நிலைமையைத் தடுக்க வழிவகைகள் காண்கின்றனரென அறிய வருகின்றது.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

தொல்புரம் (1) காலம் சென்ற நாகமுத்து கணபதிப்பிள்ளை பெண் ஆச்சிமுத்துவின் தத்துவக்காரன் அருணாசலம் கந்தையா.

வழக்காளி

தத்துவ வழக்கு இலக்கம் 1547.

வட்டுக்கோட்டை கிழக்கு காலம் சென்ற அருணாசலம் கந்தசாமியின் கோட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாறி அருணாசலம் கந்தசாமி கைம்பெண் சிவக்கொழுந்து.

(2) குமாரசாமி சரவணமுத்துவும் (3) பெண் சிவபாக்கியமும்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின 11163-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ம் ஆண்டு தைமீ 22உ சனிக்கிழமை பிற்பகல் 4½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணி விபரம்**

வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை வட்டகோலையும் பெரிய வளவும் நிலப்பரப்பு 17⅜, வீடும் தலைவாசலும், அடுப்படியும் கிணறும் வான்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு மார்க்கண்டு அருணாசலத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வேலாயுதர் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம். இதனடங்கலில் சொரியலாய் ¼ விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொம்மிஷனர்.

சித்தன் கேணி,
22-12-54.

M 205 14-1-55

ஆனைக்கோட்டை

## கிராமமுன்னேற்றச் சங்கமும் சனசமூகநிலையமும்

### ஆறுவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

1954ம் ஆண்டு மார்கழி மாதம் 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. சங்கத் தலைவர் திரு. வே. சுந்தரம்பிள்ளை தலைமையில் வித்தியா சங்கமண்டபத்தில் 6 - வது வருடாந்தப் பொதுக் கூட்டம் ஆரம்பமாயது.

காரியதரிசியின் சென்ற வருடாந்தக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பெற்று சபையோரின் அங்கீகாரத்தைப் பெற்றது. பின் தனாதிகாரி தனது வரவு செலவுக் கணக்கை ஒப்படைக்க அதுவும் அங்கீகாரம் பெற்றது.

அடுத்தபடியாக புதவருட உத்தியோகத்தர் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு வே. சோமசுந்தரம்பிள்ளை, உப தலைவர்கள் திரு. வே. சி. நாதன், திரு. செ. இராசரத்தினம், காரியதரிசி: திரு. த. மார்க்கண்டு, உதவிக் காரியதரிசி: திரு சி. குமாரசாமி தனாதிகாரி: திரு சி. கனகசூரியர், உதவித்தனாதிகாரி திரு. க. மயில்வாகனம், காரியதரிசி (விளையாட்டுப் பகுதி) திரு இ. சிவதாசன், உதவிக்காரியதரிசி (விளையாட்டுப் பகுதி) கணக்குப்பரிசோதகர் திரு இ. திருஞானசம்பந்தர், இத்துடன் பின்வருபவர்கள் ஏகமனதாக நிருவாகசபை அங்கத்தவர்களாகத்தெரியப்பட்டனர்.

திருவாளர்கள்: வை. பரமநாதன் ஆர். என். சின்னையா, வ. கதிரித்தம்பி, செல்வி த. பூபதி, திருவாளர்கள், க. தம்பிராசா, வ. பொன்னுத்துரை, வ. கணவதிப்பிள்ளை, சி. செல்லையா, யே. நவரத்தினம், ந. கருணானந்தம், இன்னும் தலைவர் காரியதரிசி உட்பட பின்வருபவர்களைக்கொண்ட ஒரு சமாதான மன்றமும் அமைக்கப்பட்டது.

திருவாளர்கள்: ஆர். என். சின்னையா, ஜே. பி;. சோ. திருநாவுக்கரசு, ஜே. பி;. ஆர். சண்முகம் செ. இராசரத்தினம், அ. வயித்திலிங்கம்.

---

### இந்தியாவின் ஆகாயவிமான ஆக்கம்

இந்தியாவுக்கும் அயல் நாடுகளுக்கும தேவையான ஆகாய விமானங்களெல்லாவற்றையும் பெங்களூரில் உள்ள இந்துஸ்தான ஆகாய விமான ஆக்க நிலையம் ஆக்கிக் கொடுக்கத் திட்டமிடுகிறதென்று அந்த நிலையத்தைச் சேர்ந்த ஸ்ரீ எச். எஸ். கவிரத்தின என்பவர் கொழும்பிலே வெளியிட்டாராம்.

---

### இருமொழிகளும் அரசாங்க மொழிகளாகவேண்டுமாம்

யாழ்ப்பாணம் முற்றவெளியில் பொதுவுடைமைக் கட்சி (கொம்மியூனிஸ்ற்) ஆதரவில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழும் சிங்களமும் சம உரிமையுள்ள அரசாங்க மொழிகளாகுமெனச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்னும் ஒரு பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

---

### பாடத் திட்டத்தைப்பற்றி ஆசிரியர்களின் கருத்து

புதிய பாடத் திட்டத்தை அமைத்த பாடத்திட்டச் சபையார் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் கருத்தை அறிய நினையாதது வருந்தத்தக்கதென்றும், 8-ம் 9-ம் வகுப்புகளில் கணிதம் விஞ்ஞானம் ஆகிய இரண்டும் தவிர ஏனைய பாடங்கள் சுயபாஷையில் கற்பிக்கலாமென்ற கருத்தை வரவேற்பதாகவும் பாரதி பாஷிய வித்தியாசாலையில் நடந்த அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க நிருவாக சபைக் கூட்டத்தில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

---

### தமிழ்ப் பண்பாட்டைக் குறிக்கும் தைப்பொங்கல் விழா

1-ம் பக்கத்தொடர்ச்சி

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு"

என்று நாமக்கல் கவிஞர் பாடியது தமிழனின் இந் நன்றி பாராட்டும் இயல்பை அடிப்படையில் கொண்டு தானே?

சூரிய பொங்கலோடு மாட்டுக்கும் பொங்கலிட்டு நன்றி பாராட்டும் தமிழன் வாழ்க.

---

### யந்திரமா யானையா?

ஒரு யானையின் விலை ரூபா நாலாயிரமாக, யந்திரக் கலப்பையின் விலை ரூபா பதினையாயிரம் என்றும், யானை ஐம்பது ஆண்டுவரை வேலை செய்ய, யந்திரக் கலப்பையோ ஐந்து ஆண்டுகளுக்கு மாத்திரம்தான் வேலை செய்கிறதென்றும், ஆகையினாலே உழவு தொழிலுக்கு யானையை உபயோகப்படுத்துதல் மிகவும் இலாபமாகும் என்றும் இந்திய விவசாய அறிஞர் அபிப்பிராயப் படுகின்றனராம்.

---

### நெல்வயல்கள் நீரிலமிழ்ந்தின

—0—

பட்டிருப்புப் பகுதியைச் சேர்ந்த நெல்வயல்கள் பதினாயிரம் ஏக்கர் வரையிற் பெருமழையால் நீரிலமிழ்ந்தினவாம் நன்கு விளைந்த நிலைமையில் இது நிகழ்ந்தமையால் கமக்காரருக்கு மிகப்பெரும் நட்டம் உண்டாயிருக்கலாம்.

---

### சீனாவின் படத்துள் இந்திய நிலம்

இந்திய சீன எல்லையிலிருக்கும் அசாம் பகுதியின் நிலம் 17,000 சதுர மைல்வரையில் சீனாவின் படத்துட் காட்டப்பட்டிருக்கிறதாம். காஷ்மீர்ப் பகுதி நிலமும் குறித்த சீனப் படத்துட் காட்டப்பட்டிருக்கின்றதாம். இவையன்றி பர்மாவின் 800 சதுரமைல் நிலமும் போர்மோசா, ஹொங்கொங் முதலிய நாடுகளின் நிலங்களும் இப்படியே சீன படத்துட்காட்டப்பட்டிருக்கின்றனவாம்.

முன்னொருமுறை இத்தகைய படமொன்றைக் கண்டு இந்திய அரசாங்கம் சீன அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டிய பொழுது அது அச்சுப் பிழையென சீன அரசாங்கம் ஏற்றுக் கொண்டதால் இந்திய அரசாங்கம் இதைப்பற்றி அதிகம் சிந்திக்கமாட்டாதாம்.

---

## உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள், 16—1—55 —— 23—1—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

ஒரு தனப்பமான வாரம். சித்தி பெறுதற்கு நீர் மிக முயன்றுழைக்க வேண்டும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளவேண்டும். வார இறுதியில் பிதாவழி இனத்தவர் உமக்குக் கொஞ்சம் கோபம் மூட்டக்கூடும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.**

குடும்பத் தொந்தரவுகள் இந்த வாரம் உண்டாகக்கூடும். மனச் சமாதானத்துக்கும் பங்கமேற்படுதற்கும் இடமுண்டு. ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம்.

**மிதுனராசி மிருகசிரிடம், 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

குடும்ப வாழ்க்கை கொஞ்சமும் திருப்தியாயிருக்க மாட்டாது. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்குமிடமுண்டு. நண்பர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும் பணத்துறையில் நல்ல வாரம்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

ஒரு தனப்பமான வாரம். வரவு செலவைச் சமாளிக்க வருந்துவீர். உமமுடைய நண்பர் உம்மைப் பிழையாய் விளங்குவார்கள். வார இறுதியில் அன்னியதேசங்களிலிருந்து நல்ல செய்திகள் வருதல் நிச்சயம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. வயிற்றுக் குழப்படிகளுக்கு அறிகுறிகளிருக்கின்றன. கந்தோரிலும் சில தொந்தரவுகளிருக்கும். நண்பருடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் மாதாவழி இனத்தவரால் சில தொந்தரவுகளுக்கிடமுண்டு. விரைந்து கோபமுண்டாக விடவேண்டாம். பணத்துறையில் நல்லவாரம். புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

பணத்துறையில் நல்ல வாரம். ஆனால் செலவுமதிகரிக்கும். நடைமுறை வேலையில் மாற்றத்துக்கு இடமுண்டு. நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**விருட்சிகராசி விசாகம் 4 - ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்தவாரம் சண்டை தொடுக்கநீர் முந்துவீர். வாகனங்கள் மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு உத்தியோகத் துறையில் நல்லவாரம். பகைவாழ்விக்குமிடமுண்டு.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வாரமிகுதி வியாபார காரியங்களுக்கு நல்லது. ஆனால் உமக்கு மனச்சமாதானமிராது.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

வாரத்தின முதலிரு நாட்களும் புதுமுயற்சிகளுக்கு நல்லாயிருக்கும். செவ்வாய் புதனும வியாழன் முற்பகலும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வாரமிகுதி திருப்பவும் நல்லதாகின்றது.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்தவாரம் சுகவீனங்களுக் கிடமுண்டு நண்பருடனும் இனத்தவர்களுடனும் சண்டைகளுக்குமிடமுண்டு. ஒன்றையும் புதியதாய்த் தொடங்க வேண்டாம். வியாழன் மாலையும் வெள்ளி சனியும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

வியாபார காரியங்களுக்கு அல்லது உத்தியோக காரியங்களுக்கு நல்ல வாரம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். பகைவாழ்வுக்கு மிடமுண்டு. இந்த வாரம் முழுதும் தேக சுகத்தைப்பற்றிக் கவனமாயிருக்கவும்.

---

## இன்றே சமயத்தொண்டில் ஈடுபடுவோமாக

1-ம் பக்கத்தொடர்ச்சி

அனுஷ்டானங்களைப் பயிற்றுவதற்கும் ஆசிரியராயினார்க்கு ஆண்டவன் தந்த வாய்ப்புப்போல் வேறு யார்க்குக் கிடைத்திருக்கிறது. இந்த ஆசிரியர்கள் தங்கள் சமயத்துக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவோமென்று நிச்சயித்து இன்றே நன்முயற்சிகளில் ஈடுபடுவாராயின் சமயத் தொண்டர் தொகை ஆயிரக்கணக்காகிவிடும்.

இவ்வாறன்றோ கிறிஸ்தவர்கள் முன்னாளில் முயன்று மதமாற்றம் செய்வதில் முன்னேற்றமடைந்தனர். வைத்தியசாலையில் படுத்திருக்கும் நோயாளிகளுக்கும் சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்கும் பலவீனர்களுக்கும் தாய் தந்தையற்றுத் தவிக்கும் அநாதைகளுக்கும் இரக்கம் காட்டியும், பொருளுதவியும், ஆறுதல் தேறுதல் கூறியும் மதமாற்றம் செய்து சித்தியடைந்தார்களல்லவா? நம்மவர்களில் எத்தனை உத்தமர்கள் வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி வருகிறோம். சைவ சமயத்தைச் சேர்ந்த நாட்டு வைத்தியர்களும் ஆங்கில முறை வைத்தியர்களும் சமயத்தொண்டு வகையில் ஏது செய்து வருகிறார்கள்? அம்ம! கியாயதுரந்தரர்களைப் பற்றிப் பேசுவானேன்! படிப்பது திருவாசகம், இடிப்பது சிவன் கோவில் என்னும் கொள்கையுடைய வேஷதாரிகள் நமது மத்தியில் எத்தனை பேருண்டு தொண்டர் திரட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு சைவனும் ஒவ்வொரு சமயத் தொண்டனாகத் திகழவேண்டும். உயிரில்லா உடம்பு போல் சாதனையின்றிப் போதனை பயன் தராதாதலின் நாம் ஒவ்வொருவரும் இன்றே சமயத்தொண்டில் ஈடுபடுதற்கு நம்மை இறைவன் உற்சாகப்படுத்துவானாக.

---

rinted and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday January 14, 1955.